**DEPOSITION OF WITNESS**

(Chapter XXIII Code of Criminal Procedure)

-----

**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE COURT, No.I, PERAMBALUR.**

**CC.No.199/2017** **Date :20/04/2023**

**PW6 (சண்முகம் த/பெ.ராசு ) குறுக்கு விசாரணை தொடர்ச்சி** : சாட்சி சத்தியபிரமாணம் செய்யப்பட்டு குறுக்கு விசாரணைக்கு அனுமதிக்கப்பட்டது.

**(எதிரி ஆஜர் )**

21.எந்த சாட்சியத்தின் அடிப்படையில் நடைமுறையில் உள்ள ரொக்க இரசீது வழங்காமல் புழக்கத்தில் இல்லாத போலி ரொக்க இரசீதை வழங்கியுள்ளார் என நான் இறுதி அறிக்கை தாக்கல் செய்துள்ளார் என்றால் விசாரணை அலுவலரின் விசாரணையின் மூலமாக நான் தெரிந்து கொண்டேன். இது குறித்து விசாரணை அலுவலர் எங்களது வாக்குமூலத்தில் கூறியுள்ளாரா என்றால் விசாரணை அலுவலர் அவரது வாக்குமூலத்தின் எந்த பகுதியில் கூறியுள்ளார் என்றால் வாக்குமூலத்தில் குறிப்பிடவில்லை ஆனால் அவரது விசாரணை அறிக்கையில் கூறியுள்ளார். இந்த வழக்கில் கூறப்பட்ட உண்மையான ரசீதுகளை நான் கைப்பற்றியுள்ளேன். அது நீதிமன்றத்திற்கு அனுப்பப்பட்டுள்ளதா என்றால் அனுப்பப்பட்டுள்ளது. புழக்கத்தில் இல்லாத ரசீது யாரால் தயார் செய்யப்பட்டது என எனது விசாரணையில் தெரிந்து கொண்டேனா என்றால் தெரிந்து கொண்டேன். வங்கியின் எழுத்தர் கதிரேசன் என்பவர் மூலமாக தெரிந்து கொண்டேன். மேலும், எதிரியின் மூலமாகவும் இந்த விபரத்தை தெரிந்து கொண்டேன். எதிரியிடம் நான் பதிவு செய்த வாக்குமூலத்தை நீதிமன்றத்திற்கு அனுப்பவில்லை என்றால் சரியல்ல. நான் எதிரியை விசாரணை செய்யவில்லை என்றாலும், எதிரி என்னிடம் அவ்வாறு

Smart Quote

எந்த வாக்குமூலமும் அளிக்கவில்லை என்றாலும் சரியல்ல. அந்த கதிரேசனை நான் விசாரணை செய்து வாக்குமூலம் பதிவு செய்துள்ளேனா என்றால் இல்லை ஆனால் விசாரணை அலுவலர் விசாரித்துள்ளார். கதிரேசன் இந்த வழக்கில் எங்களால் சாட்சியாக குறிப்பிடப்படவில்லை என்றால் சரிதான். புழக்கத்தில் இல்லாத ரசீதுகள் யாரிடமிருந்து கைப்பற்றப்பட்டது என்றால் விசாரணை அலுவலரால் அது தாக்கல் செய்யப்பட்டிருந்தது. அந்த புழக்கத்தில் இல்லாத ரசீதில் உள்ள கையெழுத்து எதிரியுடையதா என நான் ஒப்பிட்டுப் பார்த்தேனா என்றால் பார்த்தேன். ஒப்பிட்டு பார்ப்பதற்காக எதிரியின் மாதிரி கையொப்பத்தை நான் பெற்றேனா என்றால் இல்லை ஆனால் ஆவணங்களின் அடிப்படையில் நான் அதை ஒப்பிட்டுப் பார்த்தேன். நான் போலி ரசீதில் உள்ள எதிரியின் கையொப்பமாக கூறப்படும் எழுத்தை ஒப்பிட்டு பார்க்க பயன்படுத்திய ஆவணம் எது என்றால் ரொக்க ரசீது புத்தகத்தை வைத்து சரிபார்த்தேன்.

22. இந்த வழக்கின் சாட்சிகள் மாணிக்கம் த/பெ.ராமசாமி, என்பவர் யார் இரசீது வழங்கியுள்ளார்கள் என அவரது வாக்குமூலத்தில் குறிப்பிட்டுள்ளாரா என்றால் குறிப்பிடவில்லை. எதிரியை தொடர்புபடுத்தும் விதமாக எந்த வாசகமும் இவரது வாக்குமூலத்தில் இல்லை என்றால் சரி அல்ல. ஏனென்றால் ரசீதை வங்கி அலுவலரிடம் கொடுத்ததாக கூறியுள்ளார். மேலும் இந்த சாட்சியை விசாரணை அதிகாரி விசாரித்ததாகவோ அல்லது அவரிடம் வாக்குமூலம் கொடுத்ததாகவோ எங்களது வாக்குமூலத்தில் அவர் குறிப்பிடவில்லை என்றால் சரிதான். இவர் கடன் பெற்றதாக கூறப்படும் கடன் பேரடுகள் எதையும் கைப்பற்றி நாங்கள் இந்த வழக்கில் ஆவணமாக

தாக்கல் செய்துள்ளோமா என்றால் கைப்பற்றி நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளோம். மாணிக்கத்திடம் நாங்கள் எந்த ஆவணங்களையும் கைப்பற்றவில்லை என்றாலும் கைப்பற்றியதாக பொய்சாட்சியமளிக்கிறேன் என்றாலும் சரி அல்ல. எதிரிக்கும் மாணிக்கத்தின் வரவு செலவிற்க்கும் எந்தவித சம்பந்தமும் இல்லை என்றால் சரியல்ல.

22.பூராசாமி என்ற சாட்சி எதிரியிடம் பணம் கொடுத்ததாகவோ அதற்கு எதிரி ரசீது வழங்கியதாகவோ குறிப்பிடவில்லை என்றால் சரிதான். இவரிடம் விசாரணை செய்ததாக பிரிவு 81-ன் கீழான விசாரணை அதிகாரி குறிப்பிடவில்லை என்றால் சரிதான். இவர் குறிப்பிடப்பட்டுள்ள ரசீதுகள் புழக்கத்தில் இல்லை என்பதை நிரூபிக்க நிர்வாகிகள் உள்ள நபர்களை நான் விசாரணை செய்யவில்லை என்றால் சரிதான்.

23.பூங்கோதை க/பெ. கிருஷ்ணசாமி என்பவர் அவரது விசாரணையின் போது எனது கையில் தான் ரசீது இருந்ததெனவும் அதை விசாரணை அதிகாரியின் கையில் நான்தான் ஒப்படைத்தேன் எனவும் கூறியுள்ளார் என்றால் சரிதான். அந்த ரசீதை கைப்பற்றி அந்த ரசீதுகளிலுள்ள கையொப்பங்கள் யாருடையது என நான் ஒப்பிட்டு பார்த்தேனா என்றால் சரிபார்த்தேன். சாந்தப்பன் நண்பர்கள் கையொப்பமிட்டு ரசீதை பெற்றதாக கூறியுள்ளார். ஆனால் அந்த சாந்தப்பனை விசாரித்து வாக்குமூலம் எதுவும் பதிவு செய்யவில்லை என்றால் சரிதான். தனிப்பட்ட முறையில் புகார் ஏதும் கொடுத்ததாக இவர் கூறவில்லை என்றால் சரிதான். எழுத்து மூலமாக வாக்குமூலத்தை விசாரணை அதிகாரியிடம் கொடுத்ததாக எங்களது வாக்குமூலத்தில் இவர் கூறவில்லை என்றால் சரிதான். இந்த வரவு செலவிற்கும் எதிரிக்கும் எந்தவித சம்பந்தமும் இல்லை என்றாலும் நான் சாட்சியை சரிவர விசாரணை செய்யாமல் இறுதியாக தாக்கல் செய்துள்ளேன் என்றாலும் சரி அல்ல.

Taken down by / before me in open court read over/interpreted to the witness in the presence of the accused/accused/ pleader and admitted by the witness to be correct.

Judicial Magistrate No.I,
Perambalur.

JM-I, Pblr